சிவமயம்

gistered as a News paper in Ceylon

P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ல் ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு கார்த்திகைமீ சஉ ( 1946 நவம்பர் 19 செவ்வாய்க்கிழமை ) [இல சுருந


## பட்டறி கெட்டறி.....

### பீகார் முஸ்லீம்களின் ஓலம்

( ஸ்ரீதரன் )

பட்டறி கெட்டறி பத்தைந்து இறுத்தறி என்று நாடோடியாகச் சொல்லுவர் நம்நாட்டிலே: மூஸ்லிம் லீக் தலைவர்கள் சென்ற ஆகஸ்டு மாதம் 16-ந் திகதி தமது நேரடிப் போராட்டத்தை அங்குரார்ப்பணம் செய்தனர். கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அது போல ஆட முயற்சித்த தன்மை போல, சாத்விகத்தில், அகிம்சையில், சத்தியநெறியில் திளைத்த எம் ஐயன், பொய்யறியா மெய்யன் சபர்மதி முனிவன், காந்தியடிகள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சாத்வீகப் போராட்டம் நடத்தி வெற்றிகொண்டதைக் கண்டமகமதலிஜின்னு, தானும்ஓர் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்தார். ஆனால் அப்போராட்டம் யார்க்கெதிராக? ஹிந்துக்களையும் முஸ்லீம்களையும் நசுக்கிப் பிரித்தாளும் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துக்கு விரோதமாக வல்ல! சொந்தச் சகோதரராகிய இந்துக்களுக்கு விரோதமாக. ஜின்னு 'போராட்டம்" ஆரம்பித்தமைக்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஹிந்துக்கள் தாவர பட்சணிகள் அகிம்சையைக் கடைப்பிடிப்பவர்கள் என்பதை ஜின்னு உணருவார். ஆனால் அகிம்சை என்றால் என்ன என்பதை அவர் அறியமாட்டார், அகிம்சை என்றால் கோழைத்தனம் என்று ஜின்னு சாகிப் தர்ப்பர்த்தம் செய்து கொண்டார். அப்படி அவர் தப்பர்த்தம் செய்ததும் ஓர் காரணத்தால் தான். பலவருஷ காலமாக, இந்தியாவின் பல பாகங்களில் காலந்தோறும் வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்து வருவது சகஜம். அக்கலவரங்களின் போது, முஸல்மான்களின் கையோங்குவது வழக்கம். இதனை ஜின்னு சாகிப் அறியா திருக்கவில்லை. ஆகவே, அவர் நேரடிப்போராட்டத்தைத் தொடங்கினர்.

○

#### கல்கத்தாப் பலி

ஆகஸ்டு மாதம் 16ந் திகதி ஜின்னு சாகிப் தம் போர்முழக்கத்தைக் கூவியதும், கல்கத்தாவிற் கலவரம் உண்டாயது. 5000 பேர்க்குமேல் மாண்டனர், லட்சக்கணக்கானோர் அகதிகளாயினர். உண்மையைக் கூறுங்கால், முஸ்லீம்கள் ஆரம்பித்த போராட்டம், கல்கத்தா நகரத்திலே தமக்கே அநர்த்தம் விளைத்ததைக் கண்ட முஸ்லிம் லீக்கினர், கிழக்கு வங்காளத்திலே தம் கைவரிசையைக் காட்டினர். 100 க்கு 10 விகிதம் வரை குடிசனங்களாயுள்ள எழை ஹிந்துக்களைக் கொன்று குவித்தனர். பெண்களைக் கற்பழித்தனர் அவர்கள் இல்லங்களை எரித்தனர். பால்மணம் மாறாப் பாலகரை, முஸ்லிம் கிராதகர் இரக்கமின்றிக் கொன்றனர், பாரதநாட்டின் ஹிந்து சமுதாயம் கொதித்தது. இவை எல்லாம் நடக்க, ஜின்னுவும் அவருடைய சகாக்களும் ஓர் வார்த்தையாவது பேசி இந்த அக்கிரமங்களைக் கண்டிக்கவில்லை. நேர்மாறாக நச்சு மொழிகளை மென்மேலும் கக்கி வந்தனர். இடைக்கால அரசாங்கத்தில் மந்திரியாகவுள்ள கஸ்னுபர் அலிகான் என்ற மகான் 40 கோடி இந்தியரும் முஸ்லீம்களாக வேண்டும் என்றும் கூறினர்.

○

#### ஹிந்துக்கள் கோழைகள் அல்ல

எங்கள் புனிதமான ஹிந்துமதம் இம்சையை அறவேஒழிப்பது!கேவலம் ஓர் புருவுக்காகத் தன் தசையையே அறுத்துத் துலாத்தட்டில் வைத்து ஈற்றில் தானும் ஏறித் தன் ஆருயிரை அர்ப்பணஞ் செய்த சிபிச் சக்கரவர்த்தி செங்கோலோச்சிய து பாரதநாடு: தன் கன்று இறந்த துயரத்தைச் சகிக்காது அலறிய பசுவின் ஈனக்குரலைக் கேட்டுத் தன் ஒரே ஒரு மைந்தனைத் தேர்க்காலில் வைத்துக்கொன்ற சோழன் வீற்றிருந்தது எங்கள் ஆரியநாடு! நிலைபோய் வனத்திடைநிற்போய் வஞ்சகீசனுக்கு விலைபோயும் தன் சத்தியத்தைக் கைவிடாத சத்தியவந்தன் புரந்தது இந்தப் புண்ணிய பூமி! அப்படிப்பட்ட பாரதநாட்டு மக்கள் பொறுமையுடன் இருந்ததை ஜின்னுவும் அவருடைய சகாக்களான சண்டர்களும் தப்பர்த்தம் செய்தனர். பழிக்குப் பழி! இரத்தத்துக்கு இரத்தம்! உயிருக்கு உயிர் என்று துடித்தது பாரத ஜனசமுதாயம்! சாம பேத தான தண்ட சதுர்வித உபாயத்தில் பீகார் தண்டத்தைக் கைக்கொண்டது!

○

#### சமாதானம் நிலவுகிறது

பீகார், முஸ்லீம்குண்டர்களுக்குத் தக்கபாடம் படிப்பித்ததையிட்டு அபிப்பிராயபேதம் இருக்கத்தான் இருக்கும். ஆனால் பீகார் ஹிந்துக்கள்—அவர்களில் இந்தக் கொலை முதலியவற்றைச் செய்தவர்கள் காடையராகவிருக்கலாம் — முஸ்லீம்களின் கண்களைத் திறந்து விட்டார்கள். சண்டித்தனமும் காடைத்தனமும் பாரத நாட்டிலே பாரத சமுதாயத்தின் மீது பிரயோகித்தால் ஆபத்துத் தான் என்பதை இன்று லீகர்கள் உணர்ந்துவிட்டார்கள். வங்காளத்தில் கலகம் அடங்கிவிட்டது, இன்று அந்த மாகாணத்திலே எல்லாம் கப் சிப் என்று இருக்கிறது. மகாத்மா காந்தி அங்கே திக்கு விஜயம் செய்கிறார்; முஸ்லீம்கள் அவர்க்கு இராஜோபசாரம் செய்கிறார்கள். பீகார் எல்லார்க்கும் கண்ணைத் திறந்துவிட்டது. அதற்கு ஓர் உதாரணம் காட்டுதும்.

○

#### ஜின்னுவுக்கு எச்சரிக்கை

பீகாரின் மொங்கீர்ப் பகுதியிலே முஸ்லிம் லீக்கின் காரியதரிசியான டக்டர் சையத் மகூத் அகமத் என்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## லட்சக்கணக்கில் களவு

### புகைரதப்பொலிசார் செய்ய வேண்டியன

புகைரதத்தில் அனுப்பப்படும் பொருள்கள் காணமற் போனமைக்காக இலங்கைப் புகைரதப் பகுதியார் 1938—39-ம் ஆண்டிலே 11759 ரூபா அப் பொருள்களுக்குரியவர்க்கு நட்ட ஈடாகக் கொடுத்தனர். 1944—45-ம்ஆண்டில் இத்தொகை 322,204 ரூபாவாக அதிகரித்தது. 1945—46 ஆண்டுக்குரிய முழு நட்ட விபரமும் இன்னும் வெளிவரவில்லை. ஆனல் குறித்த இந்த ஆண்டில் முதல் ஆறு மாத காலத்தில் மாத்திரம் 257,478 ரூபா நட்டஈடு கொடுக்கும்படி எற்பட்டது ஆறுமாத காலத்துக்கு இத்தொகை என்றால், முழு ஆண்டுக்கும் 500,000 ரூபாவுக்கு மேலாகும் என நாம் எதிர்பார்க்கலாகும்.

இந்த நட்ட ஈட்டுப்பணம் மந்திரி கொத்தலாவலையின் சொந்தப் பணத்திலிருந்தோ அல்லது வேறும் அதிகாரிகளின் சொந்தப் பணத்திலிருந்தோ கொடுக்கப்படுகிறதில்லை. இலங்கைப் பொது அரசிறையில் இருந்தே அளிக்கப்படுகிறது.

இப்படியான அக்கிரமங்களைத் தடுப்பதற்காகத்தான் இலங்கையரசாங்கத்தார், புகைரதப் பாதுகாப்புப் பொலிஸ்படை ஒன்றை அமர்த்தியிருக்கின்றனர். இந்தப் பொலிசார், மிதிபலகையிற் பிரயாணம் செய்பவர்களை அகப்படுத்தி அவர்கள்மீது வழக்குத் தொடருவதில் அதிக நேரம் செலவழிப்பதை விடுத்து, பிரயாணிகளைப் பாதுகாப்பதிலும், இப்படியான களவுகள் நிகழ்வதைத் தடுப்பதிலும் தம் நேரத்தைச் செலவழித்தால் அதிக பயன் கிடைக்கும்.

## சம்ஸ்கிருதம்

### அதனை ஆங்கில மாணவர் கற்கவேண்டும்

ஏர்னெஸ்ட்பார்க்கர் என்பவர் ஓர் பிரபல ஞானி. பெரிய ஆராய்ச்சியாளர். உலகத்துச் சிறந்த கல்வி நிலையங்களில் ஒன்றாகிய கேம்பிரிட்ஜ் சர்வ கலாசங்கத்திலே பேராசிரியராக வுளர்; இவர் சென்றவாரம் பிரிட்டிஷ் மாணவர்க்குச் செய்த பிரசாரணம் ஒன்றிலே, அவர்கள் எல்லாரும்சம்ஸ்கிருதம் கற்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

இந்தியாவும், கிரீசும் பூர்வகாலத்திலே கலாசாரம் பொலிந்த நாடுகளாக மிளிர்ந்தன இந்தியாவின் சிறந்த கலைப் பொக்கிஷத்தின் திறவுகோல் சம்ஸ்கிருதம்தான். இந்தியாவின் புராதனநாகரிகத்தையும் அதன் ஒப்புயர்வற்றசிறப்பையும் நாம் அறிய வேண்டுமாயின் சம்ஸ்கிருதம் படித்துத்தான் ஆகவேண்டும்என்ற பேராசிரியர் பார்க்கர் குறிப்பிட்டார்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீஜுத் சுபரத்ராய் சவுத்தரி என்பவர் இந்திய நாட்டின் எதிர்கால நிலையைப்பற்றிப் பேசினர். பாரதநாடு ஓர் புதிய சகாப்தத்தை எய்தப்போகிறது. அப்போது அது தன் கலை விருத்தியால் உலக சமாதானத்தை நாட்டப்போகிறது, உலக சமூக வாழ்க்கைக்கு இந்தியாவே அத்திபாரம் இடப்போகிறது. பாரதநாடு ஒன்றுதான் கொந்தளிக்கிற உலகிலே சமாதானத்தையும் சாந்தியையும்கொண்டு வரப்போகிறது என்று அவர் கூறினர்.

## லஞ்சம் ஒழியாதா?

### பீகார் உதாரணத்தை இலங்கைபின்பற்றுமா

லஞ்சம் வாங்குதலும் கொடுத்தலும் ஓர் கெட்ட பழக்கம். எந்தநாட்டில் இந்த வழக்கம் அதிகமாகவுண்டோ அந்தநாடு முன்னேற்றமடையமாட்டாது. துர் அதிர்ஷ்டவசமாக இந்த இலங்கையில் லஞ்சப் பழக்கம் வெகுவாகமுன்னேறிவிட்டது என்று கூறினும் பொருந்தும். கேவலம் சாதாரண ஓர் சேவகன் தொடக்கம் பெரிய அதிகாரிகள்வரை லஞ்சம் என்னும் பேயின் வலைக்குட் சிக்கியிருக்கின்றனர் என்று கூறினால் அது மிகையாகாது.

இற்றைக்குச் சில காலத்துக்கு முன்னர். இந்த லஞ்சம் விஷயமாக விசாரணைசெய்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க ஓர் விசாரணைச்சபை நியமிக்கப்பட்டது. இந்த லஞ்சம் என்னும் கெட்ட பழக்கம், அதிகாரிகள் சில்லறைத் தெய்வங்களாம் சேவகர்மாரை மாத்திரமன்றி, இந்த நாட்டின் [illegible] நிருவாகத்தை மேற்கொண்ட அரசாங்கசபையங்கத்தவர் சிலரையும் பீடித்தது என்றும் குறித்த விசாரணைச் சபையினர் தெரிவித்து அறிக்கையிட்டனர். அவர்களாற்குற்றம்சாட்டப்பட்ட அரசாங்க சபையங்கத்தவர்கள்விலகிவிட்டனர். ஆனல் விஷயம்அவ்வளவுடன் நின்றுவிட்டது. லஞ்சங்கொடுத்தல், பெறுதல் மாத்திரம் இன்னும் குறைந்தபாடில்லை. நேர்மாறாக அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இலங்கை அரசாங்கத்தின் செயல் இவ்வாறு இருக்க, இந்தியாவிலே நடப்பது என்ன? காங்கிரஸ் கட்சி அதிகாரத்துக்கு வந்ததும் பாரத நாட்டிலிருந்து லஞ்சப்பேய் ஓடத் தொடங்கிவிட்டது. பீகார் மாகாணத்திலே காங்கிரஸ் அரசாங்கம் லஞ்சம் ஒழிப்புப் பகுதியென ஓர் அரசாங்கப் பகுதியை இப்போது மூன்று மாதத்துக்குமுன் ஸ்தாபித்தது. அந்தப்பகுதி மிகவும் திறமையுடன் வேலைசெய்து வருகிறது. உணவுப் பொருள் விநியோகம் செய்யும் பகுதியில் இருந்து ஊரவர்களின் இரத்தத்தைக் கசக்கிப்பிழிந்து லஞ்சம் பெற்

தொடர்ச்சி 6ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு
கார்த்திகை சஉ செவ்வாய்க்கிழமை

## நிர்வாண நிலைமை நேரப்போகின்றதா?

இந்நாட்டுமக்கள் புடைவைப் பஞ்சத்தினால் பாதியுடையோடும், தைத்த கந்தையோடும், மாறிக் கட்டத் துணியின்றியும் இடர்ப்பட்டு, மூன்றும்அயனத்திற்குரிய புடைவைக் கூப்பன்கள் கட்டுப்பாட்டதிகாரிகளால்எப்பொழுது வெளியிடப்படுமோ என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலே, புடைவைக் கட்டுப்பாட்டதிகாரி என்ன தெரிவிக்கின்றாரென்பது தெரியுமா? "1947-ம் ஆண்டு சித்திரை (ஏப்பிரல்)மாசத்திற்கு முந்தி எவ்வகையான புடைவைக் கூப்பன்களும் வழங்கப்படமாட்டா" என்று தெரிவிக்கின்றார். இதற்குக் காரணமென்னவெனில், இந்நாட்டு மக்களின் உபயோகத்திற்காகிய புடைவை போதிய அளவிற்கு வேற்றுநாடுகளிலிருந்து அனுப்பப்படுவதில்லையாம்; மேலும் இந்தியாவிலிருந்து 32,600,000 யார்கொண்ட புடைவையும், அமெரிக்காவிலிருந்து 900000) யார் துணிகளும் இங்கிலாந்திலிருந்து 8300000 யார் கொண்ட துணிகளும், இந்த ஆண்டில் இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய ஒழுங்கு பண்ணப்பட்டவெனவும், ஆனால் 30225600 யார் துணிமாத்திரம் இந்த ஆண்டிற்கென இங்கே இறக்குமதி செய்யப்பட்டதெனவும் புடைவைக் கட்டுப்பாட்டதிகாரி சொல்லிக் கவலைப்படுகின்றார். ஒரு ஆளுக்கு ஒருவருடகாலத்திற்கு உடுத்திக்கொள்ள 7½ யார் விகிதமாகக் கட்டுப்படுத்தினாலும் நாலுகோடியே அறுபது லட்சம் யார்கொண்ட துணி வேண்டுமென மேற்படி கட்டுப்பாட்டதிகாரி கணக்கிடுகிறார்; கொழும்பிலுள்ள வெள்ளவத்தை நெசவுத்தொழில் யந்திரசாலை வாயிலாக வருடந்தோறும் ஆக்கப்படுந் துணி ஐம்பதுலட்சம் யாராம்; பசித்தவன் பழங்கணக்குப்பார்த்தவாறு, இப்படியெல்லாம் புடைவைக்கட்டுப்பாட்டதிகாரியாகிய மிஸ்ரர் ரெட்றிக்கோ பலவாறு கணக்குப் பார்த்தாலும், இக்காலத்தில் இலங்கையில் இறக்குமதியாகுந் துணி, இரண்டாம் உலக யுத்தத்திற்கு முந்தியகாலத்தில் இலங்கையில் இறக்குமதியான துணியிற் பத்திலொன்று விகிதந்தானுமாகாதென்பதுஇங்குள்ள மக்கள் அறிந்த விஷயம்

இலங்கையில் வந்து இறக்குமதியாகும் புடைவை துணிகளுட் கூடியபாகம் இந்தியாவிலிருந்தே இங்கு இறக்குமதிசெய்யப்பட்டு வந்தது; சென்ற யுத்தகாலத்திலும் அதற்குப் பிந்தியஇக்காலத்திலும்இந்தியத் துணிதான் இங்கே அதிகமாக இறக்குமதியானது, ஆகின்றதென்பதை எங்கள் புடைவைக் கட்டுப்பாட்டதிகாரியும் ஏற்றுக்கொள்ளுகிறார். முன்னரைக் காட்டிலும் இக்காலத்தில் நூல் நூற்குந் தொழிலும் நெசவுத் தொழிலும் இந்தியாவிலே விருத்தியடைந்து வருகின்றனவென அறியக்கிடக்கின்றது; இலங்கைக்கு இந்தியர்கள் முன் செய்து வந்தவாறு அதிக புடைவையனுப்புதலின்றி இப்பொழுது குறைந்த விகிதமாக அனுப்பிவைத்தற்குக் காரணத்தையும் இங்குள்ள புடைவைக் கட்டுப்பாட்டதிகாரியே எடுத்துக் காட்டுகின்றார்; இந்தியாவிலிருந்து பெருந்தொகையான துணிகள் இருக், ஈரான், பர்மா, மலாயா முதலிய நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனவாம்; இந்திய புடைவை வியாபாரிமார், இலங்கையை அலட்சியஞ்செய்து, மேலே சொல்லப்பட்ட நாடுகளுக்கு அதிக புடைவையை ஏற்றுமதி செய்தற்குக் காரணம், அந்த நாடுகளிலே புடைவைக் கட்டுப்பாடில்லையென்றும், ஆனதால் அந்நாடுகளிலுள்ளவர்கள், இந்திய புடைவைகளின் பொருட்டு அதிக பணங்கொடுத்துப் புடைவை வாங்குகின்றார்களென்னும் அதிக இலாபத்தை விரும்பியே இந்திய புடைவை வியாபாரிகள் இலங்கையைப் புறக்கணித்து, மேலே சொல்லப்பட்ட இருக், ஈரான், பர்மா, மலாயா முதலிய நாடுகளுக்குத் துணிகளை ஏற்றுமதி செய்கிறார்களென்றும் எங்கள் புடைவைக்கட்டுப்பாட்டதிகாரியே புகலுகின்றார். இது நிசமானல் எங்கள் புடைவைக்கட்டுப்பாட்டதிகாரிகள் இலங்கையிலுள்ள புடைவைக் கட்டுப்பாட்டுப் பிரமாணத்தை அறவேயொழித்துவிட்டு, இங்குள்ள மக்களெல்லாரும் தாங்கள் விரும்பியபடி புடைவை துணிகளைக் கட்டிக்கொள்ள விடலாமே? ஆனால், இந்தியமக்கள் இங்குள்ள சிங்கள மக்கள் மேற்கொண்ட வெறுப்பும், பாராட்டும் புறக்கணிப்புமே, அவர்கள் இலங்கைக்குப் புடைவை யனுப்புதற்குப் பின்னிற்றலென்று இங்கிருந்து இந்தியாவிற்குப்போய் மீண்டுவந்த அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள்!

இவை கிடக்க, இக்காலத்திலே இலங்கையிலுள்ள மக்களனைவரும், புடைவைக்கட்டுப்பாட்டின்படி அதிகாரிகள் ஆளொன்றுக்கு ஒருவருடகாலத்திற்குக் கூப்பன்மூலம் கொடுக்கும் 7½ யார் துணியைத்தான் கட்டிக்கொண்டு தம் மானத்தையுங்காத்து வாழுகிறார்களென்று புடைவைக்கட்டுப்பாட்டதிகாரீ நினைத்திருக்கிறார்? இல்லை, இல்லை, இவர் அறிந்தும் அறியார்போல் நடிக்கிறார்; அதாவது தமிழ்ப்பெண்களுக்குரிய நால்வகைக்குணங்களுள் மடமென்ற குணத்தை எங்கள் கட்டுப்பாட்டதிகாரியும் இப்போதைக்குப் பூண்டுகொண்டனர் போலும். சோரவியாபாரிமார் இந்நாட்டிற் கொண்டுவந்து சேர்த்து மேலதிகமாகக் களவில் விற்கும் புடைவை துணிகளில்லாவிட்டால் இந்நாட்டு மக்கள் மானமிழந்து மதிகெட்டு இடர்ப்படவேண்டியல்லவா நேர்ந்திருக்கும்? பாஞ்சாலியின் சேலையைத் துச்சாதனன் வேத்தவையில் விட்டு உரிந்தபோது, அவளுக்கு இடையறாது துணியை உதவிய கண்ணபிரானும் அத்துஷ்டர்முன் வெளிப்படுதலின்றி மறைந்திருந்து தாமே அவளுடைய மானத்தைக் காத்தருளினார்; தன் மானத்தைக் காத்தருளிய கண்ணபிரானைப் பாஞ்சாலி போற்றாது விட்டாளா? போற்றினாள்; எப்படி?

"கற்றைக் குழல்பிடித்துக் கண்ணி
லான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும்
பார்த்திருந்தார்;
கோற்றத் தனித்திகிரிக் கோவிந்தா!
நீயன்றி
அற்றைக்கும் என்மானம் ஆர்வேறு
காத்தாரே?"

என்றல்லவா வணங்கித் துதித்தாள் பாஞ்சாலி, ஆனதால் தம் மானங்காத்தவரைச் சீரியரென்றும் சோரரென்றும் பேதம் பாராட்டாது எவரும் வணங்குவர்.

மேலும், வேற்றூர்களிலிருந்து கட்டுப்பாட்டு முறையில் இலங்கைக்குத் தருவிக்கப்பட்ட புடைவை துணிகளின் யார்க்கணக்கை வெளியிட்ட கட்டுப்பாட்டதிகாரி, இலங்கையிலே சோரமார்க்கமாக வந்து களவில் விலைப்பட்ட புடைவைகள் எத்தனை கோடியாரென்பதைப்பற்றி ஏதுஞ் சொல்ல நினைத்திலரே! ஏன்? ஒருபோது சோரமாக வந்த துணியின் கணக்கை அவர் அறிவாரா? அறிந்தால் அச்சோரரை இலேசில் விடுவாரா? அவர்கள் கொண்டுவந்த துணியைப் பறிமுதலாக்கி அவர்களையும் தண்டனைக்குள்ளாக்கியிருப்பரேயெனில், அது நியாயந்தான்; ஆனால், சோரர்கள் கொண்டுவந்த இடத்திலே கட்டுப்பாட்டதிகார வர்க்கத்தினர் காலந்தோறும் பறிமுதலாக்கிய புடைவை துணிகளின் யார்க்கணக்கும் கட்டுப்பாட்டதிகாரிக்குத் தெரியுமோ? அதனை-ஏன் அன்று இவ்வதிகாரி சொல்ல மறந்துபோனார் என்று ஊரவர்கள் கேட்கின்றார்கள்.

அதிகமெழுதி ஆவதென்ன? இன்னும்ஒன்றைமாத்திரம் எடுத்துக்காட்டுவோம். மானத்தைக் காப்பதற்காக இந்த இலங்கையிலேயுள்ள மக்கள் பெருந்தொகைப் பணங் கொடுத்துப் புடைவை துணியை வாங்கிக் கட்டுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்; அப்படியே வாங்கிக் கட்டிவருகிறார்கள். இலங்கையிலும் இந்தப் பொல்லாத புடைவைக் கட்டுப்பாட்டை இன்னே யொழித்துவிட்டால், இந்திய வியாபாரிமார், கட்டுப்பாட்டதிகாரி காட்டும் நியாயத்தின்படி இந்நாட்டிற்குப் போதியபுடைவைதுணிகளை அனுப்பி வைப்பார்கள்: இப்பொழுது அநியாயவிலை கொடுத்துச் சோரவியாபார முறையிற் புடைவை வாங்கும் இந்நாட்டு மக்கள், கட்டுப்பாட்டுவிலையில் இருமடங்கானவிலைக்குப் புடைவை வந்து விற்றாலும் கிலேசமின்றி வாங்கச் சித்தமாயிருக்கிறார்கள். 'இந்த அம்பலம் போனால் இன்னுமொரு அம்பலமுண்டு' என்றபடி புடைவைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் உத்தியோகம் வகித்திருப்பவர்களுக்கும் இது போனால் வேறு உத்தியோகங் கிடைக்கும்; ஆனதால், புடைவைக்கட்டுப்பாடொழிக! இலங்கை மக்கள் மானத்தோடு வாழ்க! என வாழ்த்துகின்றோம்.

# இந்திய அரசியல்

### பண்டிதர் மாளவியா

பண்டிதர் மாளவியா அவர்களின் பூதவுடம்பு சென்றவாரம் லட்சக்கணக்கான மக்கள் சமூகத்தில், காசிமாநகரத்திலே, கங்கைக் கரையிலே, தகனிக்கப்பட்டது. பண்டிதர் மாளவியாவின்பிரிவுபற்றி டெல்கி இராஜாங்க சபையிலும், மத்திய சட்டசபையிலும் அநுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எல்லாக் கட்சியினரும் பண்டிதர் பிரிவுக்கு அநுதாபங் கூறினர்.

* *

### ஜின்னாவுக்கு மூளைக்கோளாறு?

மகமத்அலிஜின்னாவுக்கு இப்போது சிலகாலமாக மூளைக்கோளாறு ஏற்பட்டிருக்கிறதா என்று நாம் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. அவருடையகூற்றுக்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாகத் தெரிகின்றன. சென்றவாரம் ஜின்னாசாய்பு, அமெரிக்கப் பத்திரிகை நிருபர் சிலர்க்குப் பேட்டியளித்தார். மத்திய அரசாங்கத்தைக் ஹிந்துக் காங்கிரஸ் கைப்பற்றி விட்டது. அந்த ஸ்தாபனம் மூஸல்மான்களுக்குக் கெடுதிவிளைக்கலாம். அப்படிக் கெடுதி விளைக்காமற் பாதுகாக்கவும், ஹிந்துக் காங்கிரஸ் யதேச்சாதிகாரமாகக் கர்மம் ஆற்றுமலிருக்க அவர்களைக் கண்காணிப்பதற்குமே, நாம் எம் பிரதிநிதிகளில் 5 பேரை அனுப்பினோமே யன்றி நேருவுடன் ஒத்துழைத்து அரசாங்கத்தை நடத்துதற் கல்லவென்று ஜின்னா கரைந்தார்.

* *

### தடித்த பொய்!

ஜின்னாவுக்கு மூளைக் கோளாறு இல்லாவிட்டால், அவர் தடித்த பொய்யராக இருக்கவேண்டும். பீகாரில் நிகழ்ந்த சம்பவங்கள் அவரது மூளையைக் கலக்கி இருக்கலாம். எது எப்படியிருந்த போதிலும் ஓர் பொறுப்பு வாய்ந்ததலைவர் முழுப் பூசினிக்காயைச் சோற்றிற் புதைக்க முயற்சிப்பது அடாது. ஹிந்துக்கள் ஆக்கிரமம் செய்தால், அவற்றைத் தடுக்க லீகரை அனுப்பினதாகச் சொல்லும் ஜின்னா, தனக்குரிய 5 ஸ்தானங்களில் மண்டல் என்னும் தாழ்த்தப்பட்ட ஹிந்துவை ஏன் சேர்த்தார்? அவரை ஓர் முஸ்லிம் என ஜின்னா சாகிப் நினைத்திருக்கிறாரா?

* *

### லீக் பிரமுகரின் சாட்டை

பீகாரிலே கலவரங்கள் நிகழ்ந்து ஆயிரக் கணக்கான மூஸல்மான்கள் தம் ஆருயிரை இழந்தமைக்குக் காரணம் வங்காளத்தில் அதிகாரம் வகித்துள்ள சூராவர்த்திஎன்னும் லீக் பிரதம மந்திரிதான் என்று வங்காள மாகாண முஸ்லிம் லீக் தலைவர் மவுலானா மகமத் அக்ரம்கான் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். சூராவர்த்தியின் செயல்கள்தான் கிழக்கு வங்காளத்தில் கலகம் நிகழக் காரணமாயிருந்தது. இந்தக் கலகத்தால் ஆத்திரம் கொண்டிருந்த ஹிந்துக்கள் பீகாரில் பழிக்குப் பழிவாங்கி யிருக்கின்றனர். இப்படியான குறுகிய மனப்பான்மையுடைய முட்டாள்கள் லீக்கில் இருப்பதனாலேயே வகுப்புக் கலவரங்கள் நிகழ்கின்றன என்று இந்த லீக் தலைவர் பகிரங்க அறிக்கை விடுத்திருக்கிறார்.

* *

### ஜின்னாவுக்குச் 'சவுக்கடி'!

மத்திய மாகாணத்தின் ஓர் பகுதி

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தாவலைக்கு நேர்ந்த கதி என்ன?

## தனக்கொரு நியாயம் பிறர்க்கு வேரு

### சேர் ஒலிவரின் பரிபாலன ஊழல்

**எங்கள் பணத்துக்குக் கணக்கில்லையா?** | **குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கவேண்டியது**

### ஓர் விசாரணைச் சபை உடன் வேண்டும்

(நமது அசியல் நிருபர் எழுதுகிறார்)

சேர் ஒலிவர் குணத்திலக்கா அங்கும் இங்கும் ஓடித் திரிகிறார். தேயிலை றப்பர் கொப்பரு விஷயமாக, சிலர்க்குத் தேறுதலும், இன்னும் சிலர்க்கு உற்சாகமும், இன்னும் சிலர்க்கு அநுதாபமும் சேர் ஒலிவர் கூறிவருகிறார். இது அவருக்கு இயல்பாகவுள்ள பரந்த, ஔதாரிய மனப்பான்மையைக் காட்டாநிற்கிறது. எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் மேதாவிகளில் சேர் ஒலிவரும் ஒருவர்: எனவே, அவரின் முயற்சியை நாம் பாராட்டத்தான் வேண்டும். அவர் போனவிஷயம் காயா, பழமா என்பது வேறு விஷயம் அது காயாயிருந்தால் என்ன, பழமாய் இருந்தாலென்ன, போனமனுஷன் சேமமே திரும்பி வந்துவிட்டார்; அதே ஓர் பெரும் விஷயமல்லவா! ஆனால், இச்சந்தர்ப்பத்தில் சேர் ஒலிவர்க்கு நாம் ஞாபகமூட்ட வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அந்த விடாகண் கண்டப்பேர்வழி ஸ்ரீமான். கனகரத்தினம் ஏதோ பல கூறி, சேர் ஒலிவரையும், அவரது கூட்டாளிகளையும், அவர்களது பரிபாலனத்தையும் அம்பலத்துக்கு இழுத்துவிட்டாரே! 689 கேள்விகளுக்கு மறுமொழி கூறவேண்டும். எனவே, சேர் ஒலிவர் ஏனைய கைங்கரியங்களை எல்லாம் இப்போதைக்கு ஓர் பக்கத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு இந்த 639 கேள்விகளுக்கும் பதில் சொல்வதில் ஈடுபடுவாரேயானால், அவர் மீதும், அவருடைய சகாக்கள்மீதும், இந்த இலங்கை மக்கள் கொண்டிருக்கும் பல சந்தேகங்கள் நிவிர்த்தியாகி விடும் அல்லவா?

●

**பாரதூரமான விஷயங்கள்**

சேர் ஒலிவர் குணத்திலகா ஊர்ப் பாதுகாப்பதிகாரியாக வந்த, பின் 1945-ம் ஆண்டுவரை செலவழித்த தொகை 3 கோடியே 33 லட்சத்து 34 ஆயிரத்து 406 ரூபா. இதில் 1 கோடியே 98 லட்சத்து 44 ஆயிரத்து 130 ரூபா 1942ம் 43 ம் ஆண்டுகளிற் செலவழிக்கப்பட்டன. இவை எப்படிச் செலவழிக்கப்பட்டன; யார் யாருக்குச் செலவாகின என்பது சேர் ஒலிவர்க்கும் அவர் சகாக்களுக்குந்தான்தெரியும். இந்த விபரத்தை வெளியிட்டால், ஜப்பானியரும் ஜெர்மனியரும் எங்களுடைய இரகசியங்களையெல்லாம் அறிந்து உடன் படையெடுத்து வந்துவிடுவார்கள் என்ற இந்த நாட்டுப்பற்றின் காரணமாக அது வெளியிடப்படவில்லை. அத்தொகை எவ்வாறு செலவழிக்கப் பட்டன என்பதற்கான கணக்குப் பரிசோதனையுமில்லை. 1944-ம் 45-ம் ஆண்டுகளில் செலவழிக்கப்பட்டுள்ள 1 கோடியே 34லட்சத்து 90 ஆயிரத்து 226 ரூபாவுக்குத்தான் கணக்குப் பரிசோதனை நிகழ்ந்தது. அது சம்பந்தமாகத்தான் இந்த 689 ஆட்சேபங்களும் எழுப்பப்பட்டன, கணக்குப் பரிசோதனை அதிகாரி என்ற நியதியில் ஸ்ரீமான் கனகரத்தினம் வெளியிட்டுள்ள ஆட்சேபனைகள் மிகவும் பாரதூரமானவை. லட்சக்கணக்கான உடுப்புக்களைக் காணவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று ஓரிடத்திற் கணக்குப் பரிசோதனை அதிகாரி கடாவுகின்றார்: இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும்.

●

**முதுசொத்தா சீதனமா?**

லட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் கணக்கு இல்லாவிட்டால் இதற்கு யார் ஜவாப்தாரி? இந்தப் பணம் யாருடையது? இது ஓர் தனி மனிதன் அப்பன் வீட்டு முதுசொத்து அல்ல! ஆத்தாள் கொண்டுவந்த ஸ்ரீதனம் அல்ல. இந்த இலங்கையில் வாழும் ஒவ்வொரு இலங்கை மகனும், மகளும், நெற்றியில் வியர்வை சிந்த, முதுகு விறைக்கப் பாடுபட்டு உழைத்து, அரசிறையாகஅளித்த பணம், இவ்வளவு பெருந்தொகையான பணத்தைத் துர்விநியோகப்படுத்தியவர் எவராயிருந்தாலும், அவர் குற்றவாளியெனக் கண்டால், அவர்க்குத் தண்டனை விதிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையல்லவா? கணக்குப் பரிசோதனை அதிகாரி தமது அறிக்கையை விடுத்து மாதக்கணக்காகின்றது. இவ்விஷயமாக அரசாங்கத்தார் என்ன நடவடிக்கை எடுத்தனர் என்று கேட்கிறோம். இவ்விஷயமாக இலங்கை அரசாங்கம், அரசாங்கப் பணத்தைத் துர்விநியோகப்படுத்திய இன்னொரு உத்தியோகஸ்தருக்கு என்ன தண்டனை ஆற்றியது? அதனை இச்சந்தர்ப்பத்தில் வெளியிடுவது சாலப்பொருத்தமாகும்.

●

**கந்தாவலை விஷயம்**

ஸ்ரீமான். கந்தாவலை; இவர் இந்த இலங்கையிலே பலகாலமாக நீதிபதி உத்தியோகத்தைச் செவ்வனே நடத்தியவர். ஈற்றில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகப் பம்பாய்க்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கேயிருக்குங் காலத்திலே, இங்கே உணவுப் பஞ்சந் தொடங்கிற்று. உணவுக்குரிய அரிசி நெல் முதலானவற்றை வாங்கியனுப்பும்படி இலங்கையரசாங்கம் அவருக்கு அதிகாரம் அளித்தது. எல்லாமாக அவரிடம் 83 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கொடுக்கப்பட்டது. இத்தொகைக்கும் பொதுவாக 81 லட்சத்து 92 ஆயிரத்து 1 ரூபாவுக்கு ஸ்ரீ கந்தாவலை பொருள்களை வாங்கி இலங்கைக்குக் கொடுத்திருக்கிறார். 1 லட்சத்து 50 ஆயிரத்து 683 மூடை அரிசியும், 4 லட்சத்து 89ஆயிரத்து 597 மூடை நெல்லும், 5000 மூடை வேறுதானியங்களும் அவர் பெற்றுக் கொடுத்திருக்கிறார்: இவ்வளவு எல்லாம் செய்தபின் மீதிக்காக, அந்த மனுஷன் வேலையினின்றும் அவமானப்படுத்தி நீக்கப்பட்டார். ஆனால் எங்கள் ஊர்ப்பாதுகாப் பதிகாரி 3 கோடியே 33 லட்சம் ரூபாயைச் செலவழித்தாரே! அ[illegible] க்குக் கிடைத்த[illegible] தண்ணீரை, அண்ணன் வா, தம்பி வா, என்று அவர் அள்ளிக் கொடுத்தார். அவ்வளவுதான்!

●

**ஒட்டிக்கொள்ளும் கோஷ்டி**

சேர் ஒலிவரின் பரிபாலனத்தில் இருந்த ஊர்ப் பாதுகாப்புப் பகுதியிலே, விமானத்தாக்குதல் நிதி எப்படித் துர்விநியோகப் படுத்தப்பட்டதென்பது ஏற்கெனவே இப் பத்திரிகையில் வெளிவந்ததாகும் அது மிக அநியாயமான முறையில் செலவழிக்கப்பட்டது; இப்படியெல்லாம் சேர் ஒலிவர் குணத்திலகாவும் அவருடைய சகாக்களும்செய்துவிட்டு மனச்சாந்தியுடன் இருக்கிறார்கள். ஆனால் இதிலும் பார்க்கக் குறைந்த குற்றத்தையிழைத்த ஸ்ரீமான் கந்தாவலைக்கு நிகழ்ந்த தண்டனை என்ன? ஓர் சமயம் அவர் கேவலம் இந்தியர் என்ற காரணத்தால் அவர்க்கு அத்தண்டனை விதிக்கப்பட்டதா? நீதி என்பது எல்லார்க்கும் பொது என்பதை இன்று இலங்கையின் அதிகார பதவிகளில் அட்டைபோல ஒட்டிக்கொண்டுள்ள செனநாயக்காக் கோஷ்டி அறியமாட்டாரா?

●

தொடர்ச்சி 5 ம் பக்கம்

---

## இலங்கையின் வியாபாரத்தூதர்

இலங்கையரசாங்கத்தின் சார்பாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ, மத்தியகிழக்குப்பகுதி நாடுகள் தென் அமெரிக்கா, ருஷியா முதலாம் நாடுகளுக்குத் தூதுவர்களை அனுப்பி இலங்கை வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ய, மந்திரசபையார் தீர்மானித்திருக்கிறார்கள். இது சம்பந்தமான பிரேரணை ஒன்று அரசாங்கசபையில், கைத்தொழில் வர்த்தக மந்திரியினால் எடுத்தாளப்படவிருக்கிறது.

——

## கோவில்திருக்குளத்தில் மரணம்

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் திருக்குளத்தில், நுணாவில் சங்கரப்பிள்ளை தம்பிராசா என்பவருடைய பிரேதம் சென்ற சனிக்கிழமை மிதக்கக் காணப்பட்டது. இவர் முதனாள் வெள்ளிக்கிழமை திருக்குளத்தில் ஸ்நானம் செய்யப்போய் அமிழ்ந்தினார் என்றும், பிணம் மிதக்கும்வரை எவர்க்கும் இது விஷயம் தெரியாதென்றும் கூறப்பட்டது வழக்கமான பிரேதவிசாரணை நிகழ்ந்தபின் பிரேதம் சுற்றத்தாரால் கொண்டு போகப்பட்டது.

---

## சேர்ச்சில் ஓலம்!

### ஜெர்மனியுடன் சமாதானம் வேண்டுமாம்

பிரிட்டிஷ் பாராளு மன்றத்துக் கூட்டம் சென்ற செவ்வாய்க்கிழமை ஆரம்பமாயது. மன்னர்பிரான், தமது மந்திரசபையின் உரசியற் கொள்கைகளை எடுத்துரைத்தார். இந்தியாவுக்குச் சுயராச்சியம் கொடுக்கவேண்டியதன அவசியத்தைஅவர் வற்புறுத்தினர். பிரிட்டிஷ் மந்திர சபைத் தூதுக் கோஷ்டி வகுத்த திட்டத்தில் மாறுதலின்றி நடக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

மன்னர்பிரான் பிரசாரணத்தினை சேர்ச்சில் கண்டித்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மாணிக்கமாயிருந்த இந்திய நாட்டைக் கைவிடலாமா என்று அவர் ஓர் பாட்டம் ஒப்பாரி கூறினர். இதனியா விஷயமாக இப்படி அநியாயம் செய்துவிட்டுப் பலஸ்தீனத்தில் யூதர்க்கு அநீதி விளைக்கத்தக்கதாக, அவர்களை அராபியர்களிடம் காட்டிக் கொடுத்தல் முறையல்லவென்றும், பலஸ்தீனத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் செவ்வனே நிர்வகிக்க முடியாவிட்டால் அதனை ஐக்கிய தேச ஸ்தாபனத்திடம் ஒப்படைத்தல் மேல் என்றும் கூறினர்.

அயல்நாட்டுக் கொள்கை விஷயமாக ஜெர்மனியுடன் இனி நட்பாயிருக்கவேண்டும் என சேர்ச்சில் கூறினர். பழிக்குப்பழி வாங்கும் மனப்பான்மையை ஜெர்மனி விஷயத்தில் இனியும் கைக்கொள்ளவொண்ணாது என்று அவர் கூறினர்.

---

## இளந்தமிழா! எழுந்து நில்!

தமிழனென்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நில்லடா
தரணியெங்கும் இணையிலாஉன் சரிதைகொண்டு சொல்லடா
அமிழ்தமென்ற தமிழினோசை அண்டமுட்ட உலகெலாம்
அகிலதேச மக்களுங்கண் டாசைகொள்ளச் செய்துமேல்
கமழ்மணத்தின் தமிழில்மற்ற நாட்டிலுள்ள கலையெலாம்
சட்டிவந்து தமிழர்வீட்டில் கதவிடித்துக் கொட்டியே
நமதுசொந்தம் இந்தநாடு நானிலத்தில் மீளவும்
நல்லவாழ்வு கொள்ளச்சேவை செய்துவாழ்க நீண்டநாள்

—நாமக்கல் வீரக்கவிஞர்

---

## 1 கோடியே 10 லட்சம் பனைகள்

### தறிக்கப்பட்டு விட்டனவாம்

இந்த யாழ்ப்பாணக் குடாநாட்டிலே கடந்த 25 ஆண்டுகளுக்குள் 1 கோடியே 10 லட்சம் பனைமரங்கள் தறிக்கப்பட்டுவிட்டன என்று வடமாகாணத் தலைவர் ஸ்ரீமான் C. குமாரசுவாமி அவர்கள் சென்றவாரம் சாவகச்சேரியில் நிகழ்ந்த ஓர் பொதுக்கூட்டத்திற் கூறினர்.

இக்கூட்டம் உணவுப்பொருள் அபிவிருத்தி இயக்கத்து ஆதரவில் நிகழ்ந்தது. ஸ்ரீமான் குமாரசுவாமி கூட்டத்தை ஆரம்பித்து வைக்கையில் மேலே சொல்லியவாறு குறிப்பிட்டு, இப்படியாக அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாக, புதுப்பனைகள் உண்டாக்கப் படவேண்டும் என்றும், ஊரவர்கள் இந்தக் கற்பகதரு உற்பத்தியில் ஈடுபடவேண்டும் என்றும் கூறினர்.

பனம்பழத்தில் உள்ள களியினை, மேல்நாடுகளில் ஆக்கப்படும் பழம்பாகுபோல ஆக்கிப் போத்தல்களில் அடைத்து இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் விற்பனையாக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன என்று விவசாயப்பகுதி உத்தியோகத்தரான திரு எம் ஆர் எம் ஜெயரத்தினம் அவர்கள் அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் வேண்டுகோள்

## சங்கீதாபிவிருத்திக்கு உற்சாகம் வேண்டும்

( கானப் ரியை )

ஒரு சங்கமோ ஸ்தாபனமோ வளர்ச்சியுற்று தன் நோக்கத்தினின்றும் பிசகாது மேல்நிலையடைந்து நிற்பதென்பது அதன் உண்மையான நல்லெண்ணத்தையும், அங்கத்தவர்காரிய நிர்வாகிகள் என்போரின் ஒத்துழைப்பையுமே பொறுத்தது எனலாம்.

நம்நாட்டில் சங்கங்கள் பல கூடலாம். கூட்ட அறிக்கைகள் வாசிக்கலாம். விருந்துபஸாரங்கள் செய்யலாம். இந்த விமரிசைகட்கெல்லாம் அடிப்படையான உருப்படியான அம்சங்கள் ஏதாவது இருக்கத்தானேவேண்டும்! அப்படி ஒன்றும் இல்லாமல் வீண் பெருமை பேசிக் காலம் கழிப்பதில் கண்ட பயன் ஒன்றுமேயில்லை.

சென்ற சில ஆண்டுகளாக நாம் யாழ்ப்பாணத்திலும் "சங்கீத அபிவிர்த்திச் சபா" எனும்பெயரால் ஒரு ஸ்தாபனம் உளதாக அறிவோம்: அதன் நடவடிக்கைகளை ஆதரிப்பவர்களும் கூர்ந்து கவனிப்பவர்களும் பலர் இருக்கிறார்கள். சென்ற 5-11-46ல் அன்று அதற்குப் பத்தாண்டுப் பூர்த்திவிழா, சாயந்தர நிகழ்ச்சிகள் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நிகழ்ந்தன. அநேக பிரபலஸ்தர்கள் சமுகமளித்தனர். அவர்களில் இலங்கைக் கல்விப்பகுதி உதவி வித்தியாகர்த்தர் ஸ்ரீ கப்புக்கொட்டுவா அவர்களும் இலங்கைக் கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவராயிருந்து இளைப்பாறிய ஸ்ரீ கனகரத்தினம் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இருவரும் இசை விருப்பும் அதன் வளர்ச்சியில் முயற்சியும் ஆதரவும் உடையவர்கள். அவர்களது உணர்ச்சிமிக்க பேச்சு முற்போக்குடையோம் எனக் கூறிக்கொண்டு பிற்போக்குடன் தேய்ந்துசெல்லும் யாழ்ப்பாணத்தவர்க்கு நல்ல உபதேசம். நாட்டுப்பற்று பாஷைப்பற்று மிகுந்து தத்தம்கலாசாரத்தைவிருத்திசெய்து முன்னேறிவரும் இந்நாளில் மேல்நாட்டுக் கலாசாரத்தையும்வாழ்க்கை முறையையுமே இன்னும் பின்பற்றி வாழ்வோம் என்றிருப்போர்க்கு நல்ல சாட்டை,

நம்மிலும் பார்க்க கொழும்பிலுள்ள தமிழர் ரொம்பப் புத்திசாலிகள். பல்வேறு சாதியார் பலதரப்பட்ட வாழ்க்கை முறை; மேல்நாட்டுமோகம் வேறு. இப்படியெல்லாமிருந்தும் அங்கு வதியும் தமிழர் பழிப்புடன் தம் தாய்நாட்டு வாழ்க்கை முறையையும் லக்ஷியத்தையுமே பின்பற்றி வாழ்கின்றனர் என்பது எவ்வளவு பெருமையான விஷயம். தாய்ப்பாஷையாகிய தமிழே பேசத் தெரியாது, "பியானோ" (Piano) வாசித்த வீடுகளிலெல்லாம் அடிதலை மாறி வீணை, ஜலதரங்கம், தம்புரு - தம்லா எனும் இன்னிசைக் கருவிகளை வைத்துக்கொண்டு காலாட்சேபம் செய்யும் காட்சியை நம் யாழ்ப்பாண வாசிகள் கண்டால் நாணித் தலை குனியவேண்டும். அவர்கள் விழாக்களிலும் கச்சேரிகளிலும் கலந்துகொள்ளும் காட்சியே ஒருதனி. இதனை அன்று பேசிய சிங்களக் கனவான் திரு. கப்புக்கொட்டுவாகூடப் பாராட்டிப் பேசினுரென்றால் கேட்பானேன்!

"கொழும்பில் வதியும் குடும்பப் பெண்கள்கூடக் கர்நாடக சங்கீதத்தை வளர்த்து வருகின்றனர்; கச்சேரிகளில் கலந்து கொள்கின்றனர். வெள்ளவத்தை முதலாம் தமிழர் வசிக்கும் இடங்களில் எல்லா இல்லங்களிலும் இசை கேட்பதை யுணர்ந்து நான் இன்புறுவதுண்டு" என்றுர்.

கொழும்பூரில் மட்டுந்தானு! கடல் கடந்துபோன நம் தமிழர் இவர்களிலும் எவ்வளவோ முன்னேறிவிட்டனர்; முன்னேறுகின்றனர். "கோலாலம்பூர் ஸங்கீத ஸபாவின்" ஆக்க வேலைகள் எவ்வளவோ அபாரம், அன்று பேசிய டக்ரர் அமரசிங்கம் அவர்கள் அதைப்பற்றி மிக அடக்க ஒடுக்கமாய் இரண்டோர் வார்த்தை பேசி இருந்து விட்டார். அவர் கூறுவிட்டாலும் அந்த ஸபாவில் கற்றுத்தேறிய எத்தனையோ இசைமணிகளை நாம் பார்த்ததுண்டு. அவர்களின் கானரசத்தைப் பருகியதுண்டு. இத்தனை சிறந்த ஆக்க வேலையை ஆர்வத்தோடு நிறைவாக்கிய பெருமக்களைப் போற்றியதுண்டு. இவர்களுடைய முன்மாதிரியையாவது யாழ்ப்பாணச் சங்கங்கள் சபைகள் பின்பற்றியிருக்கலாகாதா என வருத்தப்பட்டதுண்டு. யாழ்ப்பாணச் சங்கீத அபிவிர்த்திசபா இவ்வளவு ஆதரவு பெற்றிருந்தும் நல்ல உற்சாகமுள்ள அங்கத்தவரைப் பெற்றிருந்தும் இந்தப் பத்தாண்டிற்குள் எவ்வளவோ காரியங்களைச் சாதித்திருக்கலாம். ஒரு இசைக் கலாசாலையையே நிறுவி நம் நாட்டு மாணவர் சென்னைக்கும் சிதம்பரத்திற்கும் செல்லும் சிரமத்தையும் குறைத்திருக்கலாம். ஸ்ரீ கனகரத்தினம் அவர்களும் வேறு பலரும் எடுத்துக் கொண்ட ஊக்கத்தினுற்ருனே கொழும்பில் இசைக்கலாசாலை ஏற்படலாற்று! யாவரும் ஒன்றுபட்டு நன்னோக்கத்தோடு உழைப்பின் சாதிக்க முடியாததுதான் எது?

அன்று ஸபாவால் நடாத்தப்பெற்ற கதம்ப நிகழ்ச்சிகளைப் பார்த்தவர்கட்கு ஒரே ஏமாற்றம், அதிற் பங்குபற்றிய குழந்தைகள் பெரும்பாலும் ஒரே குடும்பத்துக் குழந்தைகளேயாவர். அந்தக் குடும்பத்திற்கு இசையும் கூத்தும் ஆட்டமும் பரம்பரைச் சொத்துமாகிரி: இந்த அபிவிர்த்தி சபாவின் ஆதரவினுற்றுன் அக்குழந்தைகள் ஆடல் பாடல் அபிநயம் தெரிந்துகொண்டவர்கள் அல்ல என்பதை எவரும் அறிவர். ஏதோ அவர்களாவது அன்று தம்மால் இயன்றளவு ஆடிப் பாடி மகிழ்வித்தார்கள்! ஆனுல் செய்யக்கூடிய - நாட்டுக்குபயோகமான எத்தனையோ காரியங்களைச் செய்யாமல் இருந்துவிட்டது. இதன் முக்கிய உறுப்பினர் நல்ல உற்சாகமுள்ளவர். ஆர்வமுள்ளவர். அவரும் மற்றவர்களும் சிரத்தை எடுத்து ஏனைய சங்கீத சபைகளுடன் சேர்ந்து எவரும் மதிக்கத்தக்க முத்தமிழ் மன்றத்தையோ இன்னிசை மன்றத்தையோ நம் யாழ்ப்பாண நாட்டில் நிறுவலாம். அரசினர்கூட ஆதரவு தருவார்கள்.

கடந்த காலம் போகட்டும்; இனியாவது நாட்டு நலன்கோரி உழைக்க உதார குணமுள்ள புருஷர்களும் ஸ்திரீகளும் முன்வருவார்களாக.

## பௌத்தகுருமாரும் அரசியலும்

பௌத்தகுருமார் அரசியலிற் பங்குபற்றுவதை அரசாங்கம் சட்டபூர்வமாகத் தடுக்கவேண்டும். அப்படியான ஓர் சட்டம் இயற்றுவதாக அரசாங்கம் வாக்களிக்கும்வரை தாம் உண்ணுவிரதம் இருப்பது என்று பொலன்னறுவையைச் சேர்ந்த சமதிவாகா பிரமச்சாரி தீர்மானித்துச் சென்ற [illegible] உண்ணுவிரதம் இருந்து வருகிறுர்.

கடிதம்

## நீர்வேலியில் கல்வி நிலைமை

ஐயா!

நமது கிராமத்தின் கல்வி நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. ஏனைய கிராமங்களுடன் நமது கிராமத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெரிய மனவருத்தமாய் இருக்கிறது. இந்த அபிப்பிராயத்தை விஷயந்தெரிந்த எவர்களும் மறுக்கமாட்டார்கள். உதாரணமாக கோப்பாயில் 11 பாடசாலைகள் உண்டு. நமது கிராமத்தில் 3 பாடசாலைகள் உண்டு. அந்த 3 பாடசாலைகளும் நீர்வேலி வடக்கிலேயே இருக்கின்றன. நீர்வேலிதெற்கில் பாடசாலை இல்லை வடக்கில் உள்ள பாடசாலைகளில் 2 பாடசாலைகள் கிறீஸ்த பாடசாலைகள். ஒருபாடசாலைசைவப்பாடசாலை இப்பாடசாலையும் சரியான நல்ல நிர்வாகமின்மையினுலேசீரழிகிறது. நல்லபடிப்பில்லை. ஏறக்குறைய மேல் வகுப்பு படிப்பதற்காக 100 பிள்ளைகள் வரையில் வேறு கிராமங்களுக்கு நடந்துபோய்ப் படிக்கிறுர்கள். இச் சைவப்பாடசாலை சைவப்பெரியார் சங்கரபண்டிதர் அவர்களால் நிறுவப்பட்டது என்பதை ஞாபகப்படுத்துகிறோம் ஏறக்குறைய தற்போதைய (சென்ஸஸ்) கணக்கின்படி 1 00 பிள்ளைகள் நீர்வேலியில் படிக்கவேண்டும். ஆனல் தற்போது சைவப் பாடசாலையில் 300 வரையிலும் கிறிஸ்த பாடசாலைகளில் 150 வரையிலும் பிறவூர்ப் பாடசாலைகளில் 100 பிள்ளைகள் வரையிலும் படிக்கிறுர்கள். ஆகவே ஏறக்குறைய 750 பிள்ளைகள் படிக்காமல் இருக்கிறுர்கள். இவர்கள் சுருட்டுத் தொழிலிலும் பெற்ருேர்களுக்கு கமத்துக்கு உதவி செய்வதிலும், சோம்பேறித்தனத்திலும் ஈடுபட்டிருக்கிறுர்கள் மற்றைய கிராமங்களை நோக்கின் படிக்கிற அல்லது படித்த பெண் பிள்ளைகள் மிகக் குறைவு.

சமயக்கல்வி கீழ்நிலை யடைந்துவிட்டது. சைவத்தை வளர்பபதற்காகவும் சமயக் கல்வியை ஊட்டுவதற்காகவும் பண்டிதரால் ஆரம்பிக்கப்பட்ட சைவப் பாடசாலை அதோகதி யடைந்து விட்டது. சைவ ஒழுக்கங்கள் மறைந்தன. உயிர்கள் வதை செய்யப்படும் கொலைக்களமாகிவிட்டது அந்தோ பண்டிதருடைய ஆன்மா சாந்தி யடையுமா? இவைகளைப் பொறுத்துக்கொண்டு நாம் என் செய்வோம்,

இலவசக் கல்வியைப் பிற கிராமங்கள் பயன்படுத்துகின்றன. இதைக் கண்டும் நாம் சகித்திருக்கலாகுமா? நமது கல்வி நிலைமையைச் சீர் திருத்துவதற்காக அரசாங்கத்தார் மூலமாகவாகுதல் நீர்வேலி தெற்கில் முடிக்குரிய நிலத்தில் ஓர் பாடசாலையையும், மாசுவன்பகுதியில் ஓர் பாடசாலையையும் அமைப்போமாக

சி. க. வே,

கல்கிசை.
12-11-46.

## தேகவியோகம்

ந. விசுவலிங்கம்

மல்லாகவாசரும் நில உரிமைக்காரரும் மலாய்நாட்டுப் பென்சனருமான ந. விசுவலிங்கம் அவர்கள் தம்மைச் சிலகாலமாகப் பீடித்து வருத்திய நோய் காரணமாகத் தமது 69-ம் வயதில் ஐப்பசிமாசம் 21-ந் திகதியன்று (6-11-46) புதன்கிழமை காலை 3 மணியளவில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார். இவர் கடவுள் பக்தி, சார்ந்தோரைக் காத்தல், ஈகை முதலிய சற் குணங்கள் பொருந்தியவர்

இவருடைய மனைவியார் காலஞ்சென்ற நொத்தாரிஸ் சபாபதிப்பிள்ளையின் மகள் தங்கமுத்து அம்மாள் ஆவர் புத்திரர்கள்: வி. மா. குமாரசுவாமி (நியாயவாதி) வி சபாரத்தினம் (உபசங்கப் பரிசோதகர்) வி. நமசிவாயம், வி. குகதாசன் முதலியோர். புத்திரிகள்: இ. சற்குணதேவி, வி. தையல்நாயகி என இருவர்; மண்டபம் காம்பில் தற்போது வைத்தியராகக் கடமையாற்றும் செ. இரத்தினவேலு இவருடைய மருகராவர். இவரது ஈமக் கடன்கள் அன்றுமாலை சுற்றமித்திரர் அயயார் சமுகத்தில் மல்லாகக் குறிச்சியிலுள்ள சுடுகாட்டில் இவருடைய மூத்த குமாரரால் முறைப்படி நிறைவேற்றப்பெற்றன இவருடைய ஆத்மா சாந்தி யடைவதாக.

## பட்டறி கெட்டறி...

1-ம் பக்கத் தொடர்ச்சி

பவர் ஜின்னுவுக்குச் சென்றவாரம் ஓர் கடிதம் எழுதியிருக்கிறுர், அதன் சாரம் வருமாறு: ஜின்னு சாகிப் அவர்களே! பீகார் மாகாணத்தில் வசிக்கும் முஸ்லீம்களின்மீது எள்ளளவாவது தங்களுக்குகருணை இருக்குமானுல்அவர்களுடைய சுபீட்சத்திற்கவலையிருக்குமானுல், இதுகண்டதும்வங்காளத்திலே நிகழும் அக்கிரமங்களைத் தடைசெய்யவேண்டியது தங்கள்கடமை. வங்காளத்தில்நடக்கும்சம்பவங்களின் எதிரொலியே பீகாரில் நடப்பன. காங்கிரஸ்வாதிகள்முஸ்லீம்களைப் பாதுகாக்கத் தங்களால் ஆன முயற்சிகளைச் செய்கிறுர்கள். ஆனுல் பொதுஜனங்கள் ஆத்திரங் கொண்டு பழிக்குப்பழி, இரத்தத்துக்கு இரத்தம், உயிருக்கு உயிர், என்று வெறி கொண்டவர்போல ஆத்திரத்துடன் இருப்பதால், இக்காங்கிரஸ் வாதிகளால் அதிகம் செய்யமுடிகிறது இல்லை. பீகார் முஸ்லீம்கள் அடியோடு அழிந்து நிர்மூலமாகாதிருக்க வேண்டுமானுல் வங்காளக் கலவரம் உடனே நிற்கவேண்டும், இப்படியான சமயத்திலே கஸ்னுபர் அலிகான் என்னும் தங்களுடைய கூட்டாளி 40 கோடி இந்தியரும் முஸ்லீம்களாகவேண்டும் என்று கூறியது எரியும் கொள்ளியை ஏறத்தள்ளியவாறு முடிந்திருக்கிறது. இவருடைய பேச்சு ஹிந்துக்களுக்குப் பொல்லாத ஆத்திரத்தை மூட்டியிருக்கிறது முஸ்லிம் லீக்கும், ஜின்னுவும், மதம்மாற்ற நிச்சயித்துவிட்டார்கள் என்று இங்கே ஹிந்துக்கள் கருதுகின்றனர். இந்த "வேடிக்கை" எல்லாம் உடனே ஒழியவேண்டும்."

○

### பாடம் படிப்பாரா?

இனியாவது ஜின்னு பாடம்படித்துக்கொண்டு, தம்முடைய பாகிஸ்தான் பல்லவியை ஓர் பக்கத்திலே புதைத்துவிட்டுப் பாரதநாட்டின்சுதந்திர லட்சியத்துக்காக உழைக்க முன்வருவரேயானுல் அவரை இப்போதுதானும் இருகரம்கொண்டு வரவேற்கக் காங்கிரஸ் தலைவர்கள் தயார். இல்லையேல், எவன் வாளை ஏந்துகிருனே, அவன் வாளாலேயே மடிவான் என்ற மகாத்மாவின் மொழிகளுக்கிலக்காக முடியின் உலகம் அதிசயப்படாது. இப்போதும், ஜின்னுவின் விடாகண்ட நடத்தையினுலே, பாரதநாட்டிற்கு அந்நிய நாடுகளிலே அபகீர்த்தி ஏற்பட்டிருக்கிறது. ஐக்கியதேச ஸ்தாபனத்தில், ஸ்மட்ஸ் சேனுதிபதி இந்தியாவின் வகுப்புக் கலவரங்களைக் சுட்டிக் காட்டிக் கிண்டலாகப் பேசியதன் பின்னரேனும், ஜின்னு திருந்துவாரா? தன்னைப் பெற்று வளர்த்த நாட்டுக்கு அவகீர்த்தி பெற்றுக் கொடுப்பவர் ஒருபோதும் மனிதப் பிறவியாக மாட்டார். அவ்வளவுந் தான் நாம் கூறக்கூடியது.

## தேவை

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்துக்கு 1947ம் ஆண்டு ஜனவரிமாதந் தொடக்கம் இரு பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் ஒரு பயிற்றப்படாத தாரதரப் பத்திரமுடைய ஆசிரியருந் தேவை.

விண்ணப்பஞ் செய்யும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பாலர்களைக் கற்பிக்கும் திறமைகளைக் காட்டும் விசேட சான்றுகள் உடையராயும் சங்கீதம், சித்திரம் என்பவற்றில் விசேட திறமையுடையராயும் இருத்தல் வேண்டும்.

பயிற்றப்படாத ஆசிரியர் ஆங்கிலத்தில் குறைந்தது J. S C. பரீட்சையாவது சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 25-11-46 க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

வித்தியாலயங் காரியதரிசி.
15-11-46

விவேகானந்தசபை,
மேட்டுத்தெரு,
கொழும்பு. Mis 232 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தாவலைக்கு நேர்ந்த கதி என்ன?

(3ம் பக்கத் தொடர்ச்சி)

**அவர்களே செய்யலாமா?**

சேர் ஒலிவர் குணத்திலகா ஓர் சாதாரண பேர்வழியல்ல, விஷயம் தெரிந்தவர். ஓர் பகுதியை எப்படி வைத்து நடத்த வேண்டும் என்பதை நன்கு அறிவார். பரிபாலனச் செலவுகள் எப்படி இருக்கவேண்டும் என்பதை மேற்பார்வை செய்து வந்த சிறந்த கணக்குப் பரிசோதனை அதிகாரி. அவர் ஸி. டி. ஸி. யாக வரமுன்னர் இலங்கையின் கணக்குப் பரிசோதனை அதிகாரியாக இருந்தவர். அப்படிப்பட்ட அவரே இந்த ஒழுங்கீனங்களைச் செய்தால் நாம் என்ன கூறமுடியும். அவருடன் ஸி டீ ஸி பகுதியில் கடமை பார்த்த பிரமுகர்களும், கணக்குப்பரிசோதனை அதிகாரிகளாயிருந்தவர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

●

**நீதிபதியும் எதிரியும் ஒருவரே**

இனி நடப்பது என்ன? சேர் ஒலிவர் குணத்திலகா, இந்த ஆட்சேபனைகளுக்கு மறுமொழி கூறினால் அப்பால் நிகழ்வது என்ன? இந்த மறுமொழிகளில் கணக்குப் பரிசோதனை அதிகாரி திருப்திப்படாவிட்டால் அவர் தனது அபிப்பிராயத்தைப் பொக்கிஷக் காரியதரிசிக்கு அறிவிக்க வேண்டும். ஆனால் பொக்கிஷக் காரியதரிசி யார்? சேர் ஒலிவர்தான். தாம் செய்த பிழைகளுக்குத் தாமே தீர்ப்புக்கூறுபவருமாகிறார், அதாவது எதிரியும் அவர்தான், நீதிபதியும் அவர்தான். இதுமாத்திரமன்றி, ஊர்ப்பாதுகாப்புப்பகுதியிலே, அவர்க்கு உதவியாகவிருந்த இரண்டு உத்தியோகத்தரையும் அவர் இப்போது தம்முடைய திறைசேரிப்பகுதியிலே உயர்தர அதிகாரிகளாக்கியிருக்கிறார். இந்த நிலைமையில் நிதிக்காரியதரிசியான சேர் ஒலிவர் குணத்திலகா, ஊர்ப்பாதுகாப்பதிகாரியான சேர் ஒலிவர் குணத்திலகாமீது எவ்வாறு நடைவடிக்கை எடுக்க முடியும். ஆனால் இப்படியான ஓர் நிலைமை ஏற்பட பொதுஜனங்கள் விடவொண்ணார். இது ஒருவர் இருவர் பொருளல்ல, லட்சக்கணக்கான ரூபாய்கள் இதிற் சம்பந்தப்பட்டிருக்கின்றன, பொதுஜனங்கள் கிளர்ச்சிசெய்யவேண்டும். குற்றவாளியும் நீதிபதியுமாக ஒரே ஆள் இருக்கையில் இந்த ஊழல்களை ஓர் சுப்ரீம்கோட் நீதியரசரைக்கொண்டு விசாரணை செய்வித்து ஊரவர்க்கு நிலைமையை விளக்கவேண்டும். குற்றவாளிகள் யாரேனும் இருந்தால் அவர்கட்குத் தக்க தண்டனை விதிப்பிக்கவேண்டும். இலங்கை முன்னேற்றப்பாதையில் நிற்கிறது. இச்சந்தர்ப்பத்தில் எம் பரிபாலனம் முழுவதும் சுத்தப்படுத்தப்படல் வேண்டும்.

## அடுத்த ஆண்டு தொடக்கம் 2 படி அரிசி?

வாரத்திற்கு $1\frac{1}{2}$ படியாக உதவப்படும் அரிசிப்பங்கீடு விகிதத்தை அடுத்த வருஷ ஆரம்பத்திலிருந்து 2 படியாக உயர்த்த உணவுப்பகுதி யதிகாரிகள் ஆலோசிக்கிறார்கள் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## இந்திய அரசியல்

2-ம் பக்கத் தொடர்ச்சி

யாகிய ஜபல்பூரிலே வகுப்புக்கலவரங்கள் உண்டு என்றும், அதன் பயனுகப் பல முஸ்லிம்கள் மாண்டனர் என்றும் ஜின்னு ஓர் அறிக்கை விட்டிருந்தார். இந்த வகுப்புக் கலவரங்களை அடக்காமல், மத்திய மாகாணத்துக் காங்கிரஸ் அரசாங்கம் இருக்கிறதென்று ஜின்னு ஒப்பாரி கூறினர். ஆனல் அப்படியான கலவரங்கள் ஜபல்ப்பூரில் நிகழவில்லை. அங்குள்ள முஸ்லிம்களும் இந்துக்களும் தேனும் பாலும் போல பரஸ்பரம் அன்பு பூண்டு வாழுகின்றார்கள் என்றும் இப்படியேதான் பாரதநாடெங்கும் இந்த இரு சமூகத்தினரும் வாழ வேண்டும் என்றும், ஜபல்பூரில் வகுப்புக் கலவரங்கள் நிகழ்கின்றன என ஜின்னு அறிக்கைவிட்டது பிழை என்றும், ஜபல்பூர் முஸ்லிம் லீக் தலைவர் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

* *

**பீகார்க் கலவரம்**

பீகார்க் கலவரம் ஓய்ந்துவிட்டது. காங்கிரஸ் தலைவர்கள் அதனை இவ்வளவுசீக்கிரத்தில் அடக்கியுதையிட்டு முஸ்லிம் லீக் பலர் பாராட்டுகிறார்கள். வங்காளத்திலும் கலகம் ஓய்ந்துவிட்டது என்றாலும் சிற்சில இடங்களிலே, இன்னும் கத்திக்குத்து முதலாம் சம்பவங்கள் நிகழுகின்றன.

## பொலிஸ் அதிகாரி

### அவரை விலக்க ஆலோசனை

இப்பொழுது பொலிஸ்பகுதித் தலைவராகவிருக்கும் மிஸ்ரர் ஆர் ஆர் எம் பேக்கன் என்பவரையும், அதிகாரிகளாகவுள்ள ஜே ஏ. வால்ற்றன், பீ. ஈ. புறாடி, என்பவர்களையும் அவர்களுடைய ஒப்பந்த காலத்துக்கு முன்னரேயே நீக்கினல் என்ன என்று உள்நாட்டு நிர்வாகசபை ஆலோசித்ததாகத் தெரிகிறது.

1944-ம் ஆண்டு அரசாங்கசபையிலே நிறைவேறிய தீர்மானப்படியே இந்த மூன்று அதிகாரிகளும் அமர்த்தப்பட்டனர் என்றும், இவர்கள் அத்தீர்மானத்திற் கூறப்பட்டபடி ஒன்றும் செய்யவில்லை யென்றும், இலங்கையின் நிலைமையை அறிந்துள்ள அதிகாரிகளையே இப்பதவிக்கு நியமிக்கவேண்டு மென்றும் நிருவாகசபையிற் சில அங்கத்தவர்கள் அபிப்பிராயம் கூறியதாகத் தெரிகிறது.

ஆனல் இவ்விஷயமான விவாதம் இன்னும் முடியவில்லை. இந்தவாரம் மீண்டும், உள்நாட்டு நிர்வாக சபையில் ஆலோசிக்கப்படலாம்,

## நன்றி கூறுதல்

தொண்டமானறு காலஞ்சென்ற திரு.வீரசத்திப்பிள்ளையவர்களின் பாரியார் தேகவியோகமான போது, சமுகஞ்செய்தும், தந்தி, கடிதமென்னுமிவைகளை அனுப்பியும் அநுதாபங் காட்டிய சுற்ற மித்திரர் அயலார் முதலிய எல்லோர்க்கும் காலஞ்சென்றவரின் பிள்ளைகளாகிய திரு சுப்பையா J. P., டக்ரர் துரைசாமி, திரு. இராசரத்தினம், திரு. இராசசேகரம், வண V. R. தார்சீஸஸ் திரு. S மயில்வாகனமவர்களின் பாரியார் ஆகிய இவர்கள் தங்கள் மனப்பூர்வமான நன்றியை இச்சாதன மூலம் தெரிவிக்கின்றார்கள்.

தொண்டமானறு,
வல்வெட்டித்துறை.

உ

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

சிற்பர ளுகிவந்த செய்யவே ளாடற் றன்மை
பற்பல திறமு நாடிப் பங்கயத் தயனு மாலுஞ்
சொற்படு மகத்தின் றேவு முனிவருஞ் சுரரும் யாரும்
அற்புத மகிழ்ச்சி கோண்டாங் கின்னவா றறைத லுற்றார்

தாமரைப் பூவிலிருக்கின்ற பிரமாவும் விஷ்ணுவும் புகழ் பொருந்திய யாகாதிபனுகிய இந்திரனும் முனிவர்களும் (ஏனைய) தேவர்களும் ஏனையோரும் பரமசிவனே அவதாரங் கொண்டருளப்பெற்ற முருகமூர்த்தியின் திருவிளையாடல் பலவற்றையுந் தரிசித்து ஆராய்ந்து அற்புதத்தையும் ஆநந்தத்தையுங் கொண்டாராய்ப் பின்வருமாறு பாராட்டிப் பேசுவாராயினர் என்பது கருத்து:

செய்தவர் சிற்பரனுதலாலும், அத் திருவிளையாடல்களுள் ஒன்றைத் தானும் அரிபிரமேந்திராதி தேவர்களாக, முனிவர்களாக, வேறு எவர்களாக இயற்றுதல் இயலாதாக, அவர்க ளனைவரும் அற்புத மடைந்தனரென்க; தம்மாற் செயற்கருந் திருவிளையாடல்களைச் செய்தருளுஞ் செவ்வேள், வரத்தாற் சிறந்த சூரபன்மனையும் வெல்லுவரெனக் கொண்ட துணிபினுல் மகிழ்ச்சியுங் கொண்டனர். அற்புதம் மகிழ்ச்சியென உம்மைத் தொகையாகக் கொள்க.

[சிற்பரனுய - பரமசிவனுய; சொற்படு - கீர்த்தி பொருந்திய] (123

(சென்றவாரம் வெளிவந்த திருவிருத்தம் (122) என இருக்கவேண்டியது தவறுதலாக (123) என வெளிவந்துவிட்டது)

சேயிவ னொருவ னேபல் சிறுருக் கோண்டு நம்முன்
ஏயேனு மளவை தன்னி லெண்ணில்பே தத்த னுகு
மாயினிக் குமரனுட் லறிவரி தெமக்கு மெல்லா
மாயமு மியற்ற வல்லன் வரம்பிலா வறிவன் மாதோ.

இக்குமாரக்கடவுளொருவரே பலசிறுவர் வடிவங்களை ஏககாலத்திற் கொண்டு எங்கள் முன்னிலையில் மாத்திரைப் பொழுதில் எண்ணிறந்த வேறுவேறான கருமங்களை யாற்றுகின்றாராதலின், இம்மூர்த்தியின் திருவிளையாடல்களை உள்ளபடி உணர்தல் எங்களுக்கும் அரிதாகும்; இவர் எல்லா மாயங்களையுஞ் செய்ய வல்லவர், சர்வ ஞானத்தோடு கூடிய இறைவன் இவர்போலும் என்பது கருத்து.

மாயச் செயல்களைச் செய்யும் வன்மையுடையோமாய், கற்பகாலங்களைக்கண்ட முதியோமாய் மதித்திருக்கும் எங்கள் முன்னிலையில், பலவகைப்பட்ட மாயங்களைப் பல சிறார்வடிவங் கொண்டு இச்சேய் செய்தலினாலும், இங்ஙனஞ் செய்யும் மாயத் திருவிளையாடல்களும், திருவிளையாடல்களின் நோக்கங்களும் எங்களுக்குப் புலப்படுகின்றில வாதலாலும் இச்சேய் சர்வஞானத்தோடுகூடிய இறைவனுகவிருத்தல் வேண்டு மெனத் தேவர்களும் முனிவர்களும் மதித்தனரென்றபடி; எமக்குமென் பதை இடைநிலைத் தீபமாக்கி எல்லாமாயமும மெக்குமியயற்ற வல்லன் எனக் கொண்டு பொருள் கொள்ளலும் பொருந்தும், உம்மை - உயர்வு சிறப்பு.

(124)

கைப்பயில் குழவி போலக் காட்டிய கடவுள் செய்யும்
இப்பெரு மாயை போல யாவரும் புரித றேற்றார்
செப்பியென் வேறு யாமுஞ் செய்தோன் றில்லை யன்னான்
ஒப்பறு பரனே யாமேன் றுரைசெய்து தொழுது நின்றார்.

கைப்பயில் குழவி போலக் காட்டிய - சற்று நேரத்திற்குமுன் கையிலேந்தும் சிறு குழந்தைபோல் தம்மை எங்களுக்குப் புலப்படுத்திய; புரிதல் தேற்றார் — செய்தற்குத் துணியவும் மாட்டார்கள்; வேறு செப்பியென் - (ஒப்பற்ற பரம்பொருள் தாமென்று மதிப்பதே யொழிய) வேறு சந்தேகங்கொண்டு பேசுவதனல் ஆவதென்ன.

இக்குமாரத்தெய்வம்இறைவன்றானேஎன்றசந்தேகம் அறவேநீங்கியவர்களாய்த்தேவர்களும்முனிவர்களும்பரம்பொருளென்பதையுணர்ந்துஅறுமுகத்தெய்வத்தைத் துதித்து வணங்கி நின்றார்களென்பது இத் திருவிருத்தத்திற் சொல்லப்பட்டவாறும்.

(125)


# இலக்கிய வாசகம்

## மூன்றும் புத்தகம்

**நான்காம் வகுப்புப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது;**

(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

**இதன் வசனபாகம்:** சத்தியவிரதம் பூண்ட அரிச்சந்திர மகாராசனுடைய வரலாறு, இலகுவான இனிய செந்தமிழ் வசனநடையில் 18 பாடங்களாக வகுத்தெழுதப்பட்டுள்ளது.

**செய்யுட்பாகம்:** பஞ்சதந்திரத்தில் "காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதை (செய்யுள்) நீதிக் கவித்திரட்டு, சதகத்திரட்டு என்னுமிவைகள் அடங்கியுள்ளன பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை யென்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதியொன்றன் விலை சதம் 60 (அணு 10)**

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிற் பெறற்பாலன.

மனேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mis 287 19 19-11-46

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷ்ரன்ஸ்

### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

இப்போதுள்ள பொலிசிகள் ரூபா 700,00,000—00 மேற்பட்டது
இதுவரை கொடுபட்டதொகை ரூ 113,00,000—00 „
இப்போதைய இருப்பு ரூபா 170,00,000—00 „
1944ம்ஆூ வருஷாந்த வருமானம் 39,45,103—00 „

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

## திருச்சி ரேடியோ

### புதன் நவ 20

காலை 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 8 அங்கிலத்தில் செதிகள் 8-15 வீணை தனம்மாள் இசைத்தட்டு 8.30 கோயமுத்தூர் வி ராஜலட்சுமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கோயமுத்தூர் வி ராஜலட்சுமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கோயமுத்தூர் வி ராஜலட்சுமிபாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 பாபநாசம் எஸ் பாலசரஸ்வதி வயலின் 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திரை கானம் 7.15 வானொலி வாத்யகோஷ்டி 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்ப்பெட்டி 8 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 8.30 பாபநாசம் எஸ் பாலசரஸ்வதி வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஐரோப்பிய சங்கீதம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள்வானிலை 9 45 ஆங்கில நிகழ்ச்சி 10 ஐரோப்பிய சங்கீதம 10-30 முடிவு.

### வியாழன் நவ 21

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 கே சுப்ரமணியம் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 குரலிசை 8-30 வி கமலா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 போலகம் ஏ கே சாம்பசிவம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 போலகம் ஏ கே சாம்பசிவம பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 வி கமலா பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 7-15 செய்திவிளக்கம் 7.30 தமிழில்செய்திகள் 7.45 எஸ் வி சுப்பையா பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 கடலும் கலமும் ஒலிச்சித்திரம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே சுப்ரமணியம் வீணை 10 30 முடிவு.

### வெள்ளி நவம்பர் 22

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி கே நடராஜபாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 ஏ ராமஸ்வாமி ஐயங்கார் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே நடராஜபாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 டி கே நடராஜ பாகவதர் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 எம் ஆர் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 5.40 குரான்வுரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள 7 எம் ஆர் கிருஷ்ணமூர்த்திபாட்டு 7.30 தமிழில்செய்திகள 7-45 நான் எனும் அகந்தை பேச்சு 8 செம்பொன்னார்கோயில் ஆர் கோவிந்தசாமி பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9-15 அருட்பா 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10-30 முடிவு.

## வைத்திய சுகாதாரப் பகுதி

### மாணவத் தாதிகளுக்குச் சிங்களத்திலும் தமிழிலும் பயிற்சி வகுப்பு

பின்வரும் தகுதியுடைய, விவாகஞ் செய்யாத அல்லது தாரமிழந்த பெண்களிடமிருந்து மாணவத் தாதிகளுக்கான பயிற்சி வகுப்பில் சேருவதற்கு இக்கந்தோரிலிருந்து பெறக்கூடிய மாதிரிப்பத்திரத்தில் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்:

சாதி: இலங்கையர்

வயது:- 1947ம் ஆண்டு ஜனவரிமாதம் 15-ம் தேதியன்று 17 வயதிற்கு மேற்பட்டும் 25 வயதிற்குக் குறைந்துமிருக்க வேண்டும்.

கல்வித் தகுதி:- சிங்களத்தில் அல்லது தமிழில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்கு மேலான தராதரப்பத்திர மிருக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் இக்கந்தோரில் 1946ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5ம திகதிக்குப் பிந்தாது கிடைக்கவேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட மேலுறையில் "மாணவத்தாதிகளுக்கான விண்ணப்பம்" என்று குறித்துப் பின்வரும் விலாசமிடப்பட வேண்டும்: வைத்திய சுகாதாரப்பகுதி அதிபர், தபாற்பெட்டி 500, கொழும்பு.

எமது அல்லது இக்கந்தோரிலுள்ள வேறு எந்த உத்தியோகத்தரின் சொந்த விலாசத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பக்கூடாது.

வேறு விபரங்களுக்கு இக்கந்தோருக்கு விண்ணப்பிக்குக.

எஸ். எவ். செல்லப்பா,
வைத்திய சுகாதாரப்பகுதி அதிபர்.

வைத்திய சுகாதாரக் கந்தோர்,
கொழும்பு, 1946ம்ஆூ நொவெம்பர்மீ 8.

G 105 15, 19

## ஜீவாதார வைத்திய விளம்பரம்

மானிடர்க்குப் பெருஞ் செல்வமாகக் கிடைத்த சஞ்சீவி வைத்தியம்

ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம் இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்தி வரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11.46)

### நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)

## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி.
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
கீ. 156, செட்டித்தெரு கொழும்பு

Mis,25 23-4-46 to 22-3-47)

## லஞ்சம் ஒழியாதா?

முதலாம்பக்கத் தொடர்ச்சி

றுள்ள 243 பெரிய அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்கள். ஏனைய பகுதிகளிலிருந்தும் பலர் வேலையிலிருந்தும் அகற்றப்பட்டிருக்கிறார்கள். பீகார் காங்கிரஸ் மந்திரிசபை ஜரூராகக் கருமம் ஆற்றிவருகிறபடியால், இப்போது அங்கே லஞ்சம் வாங்குவாரும், கொடுப்பவரும் குறைந்து வருகின்றனர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

இந்தஇலங்கையில் நடப்பதென்ன?

பீகாரில் நடப்பது மக்களாட்சி! இங்கே நிகழ்வது செனநாயக்காவின் சர்வாதிகாரச் சூழ்ச்சி! அதுதான் இலங்கையின் கேவல நிலைக்குக் காரணம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, November, 19, 1946.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org